Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 தை (02-01-1991) புதன்கிழமை ஓசை 307

## வடக்கில் பற்சிகிச்சைப் பிரிவுகள் செயற்பட முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பிராந்திய சுகாதார நிலையத்தின் பற்சிகிச்சைப் பிரிவு, நடமாடும் பற்சிகிச்சை சேவை என்பன செயற்பட முடியாத நிலையில் உள்ளன. இந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள பற்சிகிச்சை நிலையங்களில் உள்ள சிகிச்சை உபகரணங்கள் சில பழுதடைந்த நிலையிலும் நவீன வசதிகள் அற்றவையாகவும் இருக்கின்றன. (4 ஆம் பக்கம் பார்க்க)

### அரசாங்க அறிவிப்பு வரும்வரை

# இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தம்

# கூட்டுப்படை தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளிவரும்வரை இராணுவ நடவடிக்கைகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவுடன் விடுதலைப்புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்தப்பிரகடனத்தைத் தொடர்ந்து அதனை ஆராய்ந்து முடிவு செய்வதற்கு மூன்று நாள் அவகாசம் தேவை என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ள வேளையிலேயே இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளது.

அதேவேளை அரசாங்கம் சகல அரசியல் கட்சிகள், பொது ஸ்தாபனங்கள் உட் (4ஆம் பக்கம் பார்க்க)

### யுத்த நிறுத்தம் பற்றி

## மகாநாயக்கர்களின் கருத்தை பிரேமதாசா கோருகின்றார்

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் அரசாங்கத்தின் பதிலை உடனடியாக எதிர்பார்த்த போதிலும் அதுபற்றி நன்கு ஆராய்வதற்கு அரசாங்கத்திற்கு குறைந்தது மூன்று நாள் அவகாசம் தேவைப்படுகிறது. இவ்வாறு கண்டியில் நேற்றுமுன்தினம் அஸ்கிரிய, மகாநாயக்க பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்கர்களைச் சந்தித்த ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

புலிகளின் கோரிக்கைக்கு பதிலைத் தெரிவிப்பதற்கு முன்பாக, அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளினதும் (4ஆம் பக்கம் பார்க்க)

### பலாலி இராணுவத்தினரால்

## யுத்தநிறுத்தம், புதுவருடம் வேட்டுத் தீர்த்து வரவேற்பு

(கெல்லிப்பளை)

பலாலி வடக்கு முகாம்களில் தங்கியிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்தையும் புதுவருடத்தையும் ஆகாயத்தை நோக்கி வேட்டு தீர்த்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11.50 மணியிலிருந்து 30 நிமி

## கொழும்பு தமிழ்க் குழுக்கள் யுத்த நிறுத்தத்தால் கவலை

## சிறிலங்கா கோரிக்கைப்படியே தமிழகத்தில் போராளிகள் கைது

### -ஹரெல்ட் ஹேரத்

(கொழும்பு)

சிறிலங்கா கேட்டுக்கொண்டதன் பேரிலேயே தமிழ்நாட்டில் தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கை என்று வெளிவிவகார அமைச்சர் ஹரெல்ட் ஹேரத் கூறினார்.

சிறிலங்காவால் இந்திய அரசுக்குக் கொடுக்கப்பட்ட சில தகவல்களின் விளைவாகவே தமிழ்நாட்டில் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைப் போராளிகள் தொடர்பாக குறிப்பான சில தகவல்களைக் கொழும்பு தருமாயின், இந்திய அரசாங்கம் (4ஆம் பக்கம் பார்க்க)

## 6248 திருமலைக் குடும்பங்கள் யா. மாவட்டத்திற்கு இடம்பெயர்வு

திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து 6248 குடும்பங்கள் யாழ் மாவட்டத்திற்கு இதுவரையில் இடம்பெயர்ந்துள்ளன.

இவர்களில் மூவாயிரத்து அறுநூற்று அறுபத்தியொரு குடும்பங்கள் வலிகாமத்திலும், சுமார் எண்ணூறு குடும்பங்கள், வடமராட்சியிலும், சுமார் ஆயிரத்து எழுநூற்று எண்பத்தேழு குடும்பங்கள் தென்மராட்சியிலும் தங்கியுள்ளன.

## வீதி சேதம் பயணிகள் சிரமம்

வவுனியா நகரப் பகுதிக்கு போக்குவரத்தை மேற்கொள்வதற்காக இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ள பாதை அடை மழை காரணமாகச் சேதமடைந்துள்ளது.

இந்தப் பாதையால் பிரயாணம் செய்வோர் பெரும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

தவிர, மேற்படி பாதையை அண்டிய பகுதியிலான சாந்தசோலை வீதியும் வாகனங்கள்

### மலையகத்தில் மக்களை

## அரசியல் மயப்படுத்த சுவரொட்டிப் போராட்டம்

(கண்டி)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தொழிற்சங்க நடவடிக்கையான வேலை நிறுத்தம் மூலம் தீர்வு காண்பதை முடிவெடுத்துள்ளது. அவசியமானால் அதனை முன்னெடுத்துச் செல்லவும் மலையகப் பிரச்சினைகளை அரசியல் மயப்படுத்த

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளிவரும்வரை இராணுவ நடவடிக்கைகள் யாவும் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவுடன் விடுதலைப்புலிகள் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்தப்பிரகடனத்தைத் தொடர்ந்து அதனை ஆராய்ந்து முடிவு செய்வதற்கு மூன்று நாள் அவகாசம் தேவை என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ள வேளையிலேயே இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளது.

அதேவேளை அரசாங்கம் சகல அரசியற் கட்சிகள், பொது ஸ்தாபனங்கள் உட்

(4ஆம் பக்கம் பார்க்க)

யுத்த நிறுத்தம் பற்றி

# மகாநாயக்கர்களின் கருத்தை பிரேமதாசா கோருகின்றார்

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் அரசாங்கத்தின் பதிலை உடனடியாக எதிர்பார்த்த போதிலும் அதுபற்றி நன்கு ஆராய்வதற்கு அரசாங்கத்திற்கு குறைந்தது மூன்று நாள் அவகாசம் தேவைப்படுகிறது. இவ்வாறு கண்டியில் நேற்றுமுன்தினம் அஸ்கிரிய, மகாநாயக்க பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்கர்களைச் சந்தித்த ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

புலிகளின் கோரிக்கைக்கு பதிலைத் தெரிவிப்பதற்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளினதும்

(4ஆம் பக்கம் பார்க்க)

பலாலி இராணுவத்தினரால்

# யுத்தநிறுத்தம், புதுவருடம் வேட்டுத் தீர்த்து வரவேற்பு

(தெல்லிப்பழை)

வலிகாமம் வடக்கு முகாம்களில் தங்கியிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்தையும் புதுவருடத்தையும் ஆகாயத்தை நோக்கி வேட்டுத் தீர்த்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11 50 மணியிலிருந்து 30 நிமி

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு தமிழ்க் குழுக்கள் யுத்த நிறுத்தத்தால் கவலை

(கொழும்பு)

கொழும்பில் இயங்கிவரும் சிறிலங்கா அரச சார்புக்குழுக்களான புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி என்பன புலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் ஆராய்வதை விட்டுத் தாம் கவலையடைவதாகவும், இந்த யுத்த நிறுத்த அறிவிப்பு விடுதலைப்புலிகளின் தந்திரமெனவும் அரசாங்கத்திற்குத் தெரிவித்ததாகக் கொழும்பிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் சமாதானத்திற்கான முன்முயற்சி

-மன்சூர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தம் வரவேற்கத்தக்கதும், சமாதானத்திற்கான ஒரு முன்முயற்சியுமாகுமென சிறிலங்காவின் வர்த்தகத் துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

இவர்களின் இந்த அறிவிப்பானது மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவுள்ளதெனக் கல்முனையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

எவ்வளவு தூரமாக இருப்பினும்

# செயலக ஊழியர்கள் கடமைக்கு வந்தேயாக வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ஊழியர்கள் எவ்வளவு தூரத்திலிருந்து வந்தாலும் சரி அவர்கள் திங்கள் தமது அலுவலகங்களுக்கு வந்தே ஆகவேண்டும் இவ்வாண்டு தொடக்கம் அலுவலகங்கள் யாவும் இரண்டு நேரமாக மாலை நான்கு பதினைந்து மணிவரை திறந்து வேலைகள் நடைபெற வேண்டும் அலுவலகங்கள் பூட்டப்படும் நேரம்வரும்வரை அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அலுவலகங்களில் தங்கியிருக்கவேண்டும் ஆகிய விடயங்கள் சம்பந்தமாக நேற்று யாழ். செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா கோரிக்கைப்படியே தமிழகத்தில் போராளிகள் கைது

-ஹரெல்ட் ஹேரத்

(கொழும்பு)

சிறிலங்கா கேட்டுக்கொண்டதன் பேரிலேயே தமிழ்நாட்டில் தமிழ்ப் போராளிகளுக்கெதிரான நடவடிக்கை என்று வெளிவிவகார அமைச்சர் ஹரெல்ட் ஹேரத் கூறியுள்ளார்.

சிறிலங்காவால் இந்திய அரசுக்குக் கொடுக்கப்பட்ட சில தகவல்களின் விளைவாகவே தமிழ்நாட்டில் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைப் போராளிகள் தொடர்பாக குறிப்பான சில தகவல்களைக் கொழும்பு தருமாயின, இந்திய அரசாங்கம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# 6248 திருமலைக் குடும்பங்கள் யா.மாவட்டத்திற்கு இடம்பெயர்வு

திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து 6248 குடும்பங்கள் யாழ் மாவட்டத்திற்கு இதுவரையில் இடம்பெயர்ந்துள்ளன.

இவர்களில் மூவாயிரத்து அறுநூற்று அறுபத்தியொரு குடும்பங்கள் வலிகாமத்திலும், சுமார் எண்ணூறு குடும்பங்கள், வடமராட்சியிலும், சுமார் ஆயிரத்து எழுநூற்று எண்பத்தேழு குடும்பங்கள் தென்மராட்சியிலும் தங்கியுள்ளன.

# வீதி சேதம் பயணிகள் சிரமம்

வவுனியா நகரப் பகுதிக்கு போக்குவரத்தை மேற்கொள்வதற்காக இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ள பாதை அடை மழை காரணமாகச் சேதமடைந்துள்ளது.

இந்தப் பாதையால் பிரயாணம் செய்வோர் பெரும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

தவிர, மேற்படி பாதையை அண்டிய பகுதியான சாந்தசோலை வீதியில் வாகனங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

மலையகத்தில் மக்களை

# அரசியல் மயப்படுத்த சுவரொட்டிப் போராட்டம்

(கண்டி)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தொழிற்சங்க நடவடிக்கையான வேலை நிறுத்தம் மூலம் தீர்வு காண்பதற்கு மலையக மக்கள் முன்னணிக்கு அதிக விருப்பமில்லையாம். தோட்டத் தொழிலாளியின் சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளுக்கு அரசியலைப் பயன்படுத்துவது முக்கியமாகும் என்று மேற்படி முன்னணி முடிவெடுத்துள்ளது. அவசியமானால் அதனை முன்னெடுத்துச் செல்லவும் மலையகப் பிரச்சினைகளை அரசியல் மயப்படுத்த ஏதுவாக சுவரொட்டிப் போராட்டத்தை மேற்கொள்வதென முடிவெடுக்கப் பட்டுள்ளது இத்தகவலை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் செ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

# அநுராதபுரத்தில் தமிழர் துப்பாக்கியுடன் கைது

(கொழும்பு)

கைத்துப்பாக்கி தோட்டாக்களுடன் இருவர் அநுராதபுரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். வவுனியாவைச் சேர்ந்த தமிழர் ஒருவரும் (வயது28), ஒரு சிங்களவருமே (வயது 30) கைதானவர்களாவர்.

இவர்கள் வசம் ஏழு சுற்றுத் தோட்டாக்களும், கைத்துப்பாக்கி ஒன்றும் இருந்ததாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மாகாணசபை ஒழுங்குகளை

# நடைமுறைப்படுத்த கிராமசேவகர்களுக்கு பயிற்சி

(கொழும்பு)

மாகாண சபை ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக கிராமசேவகர்களுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பயிற்சிகளில் இதுவரை 14, 850 பேர் பயிற்றப்பட்டு வருகின்றார்கள் எனவும், இவர்களில் பெரும்பாலானோர் தமது கடமைகளில் பரிச்சயமற்றவர்கள் என்றும் ஆகவே தான் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது எனவும் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

# வீடு இடித்த புல்டோசர் கிணற்றுள் தஞ்சம்!

(வவுனியா)

பூந்தோட்டம் பகுதியில் பொது மக்களின் வீடுகளைத் தகர்த்து வெளியாக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் புல்டோசர் ஒன்று கிணற்றில் விழுந்தது.

கிருஷ்ணபிள்ளை என்பவரது கட்டுப்படாத கிணற்றில் விழுந்த புல்டோசரை இராணுவத்தினர் மீட்டெடுப்பதற்கு முயற்சியெடுத்துள்ளனர்.

இந்தப் புல்டோசரை செலுத்திச் சென்ற சாரதியின் நிலை பற்றித் தெரியவில்லை. (நி)

இராணுவத்தினரின் தடையால்

# வவுனியாரயில்நிலையத்தில் உணவுப் பொருள் தேக்கம்

(வவுனியா)

வடபகுதிக்கு கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான உணவுப் பொருள்கள் வவுனியா புகையிரத நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா புகையிரத நிலையம் வந்த சரக்கு புகையிரத வண்டியில் அரிசி, மா, சீனி போன்ற பொருள்கள் வவுனியா அரச களஞ்சியசாலைக்கு கொண்டுவரப்பட்டன.

லொறிகள், ஊழியர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# முத்திரையிடுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த ஜூன் மாதத்திற்குப் பின் நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடுதல் வேலைகள் 1990/1991 ஆம் ஆண்டுகளுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பண்டத்தரிப்பு பிரதேசசபைக் காரியாலயத்தில் கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி (18 01 1991) வெள்ளிக்கிழமை வரை நிறுவைகள், அளவைகள் உபகரணங்கள் சரிபார்த்து முத்திரையிடும் வேலை நடைபெறும். (சு)

## வரி விளம்பரம்

**சைவ உணவு**

நியூ ஞானநிதி பவான் (சைவ உணவு) சிறந்த முறையில் உடன் ஓடர்கள் செய்து கொடுக்கப்படும். இல 879, கே. கே. எஸ். வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(B1710)

**தவறி விட்டது**

கடந்த 13 ஆம் திகதி பருத்தித்துறை - யாழ்ப்பாணம் மினி பஸ்ஸில் எனது அடையாள அட்டை (37725705V) சேமிப்புக் கைபேடு இறப்புப் பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருமதி வ. சின்னம்மா, உதிராவத்தை, புலோலி கிழக்கு விலாசத்தில் ஒப்படைக்கவும்.

(R-992)


## பிரேமதாசா ஆட்சியிலேயே

# முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்க முடிகின்றதாம்

(கொழும்பு)

1948 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரமடைந்த போதும் 1989 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பதவியேற்றபோதே முழுமையான சுதந்திரத்தை நாம் அனுபவிக்கக் கூடியதாக இருக்கிறது என தகவல் துறை ராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக் கிழமை ரூ வாஹினி கூட்டுத்தாபனத்தில் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அடிமட்டத்தில் இருந்து தெரிவான ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சிறிலங்காவின் அபிவிருத்திக்கு முற்று முழுதாக உழைக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

# வவுனியா கூட்டுறவுசங்கங்களில் அத்தியாவசியபொருள்களில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச்சங்கக்கிளைகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எவையும் விநியோகம் செய்வதற்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றிக் கூட்டுறவுச்சங்க அதிகாரிகள் இராணுவ மேலிடத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தகுந்த நேரத்தில் அனுமதி வழங்கப்படும் என்று கூறப்பட்டதாம்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப்படாத காரணத்தினால் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

## அமெரிக்காவிற்கு எதிராக

# முஸ்லிம் ஒவ்வொருவரும் ஏவுகணையாக மாறவேண்டும்

(பாக்தாத்)

வளைகுடாவில் யுத்தம் தொடங்கும் பட்சத்தில் உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் அமெரிக்காவிற்கு எதிரான ஒரு ஏவுகணையாக மாறவேண்டும் என்று ஈராக் சமயத்துறை அமைச்சர் பாக்தாதில் அறிவித்துள்ளார்.

இதேவேளை போரில் அமெரிக்கா ஈராக்கிலுள்ள இஸ்லாமிய சமய நிலையங்களைத் தான் முதலில் தாக்கத் திட்டமிட்டிருப்பதாகவும், அதைத் தடுக்க ஒரு புனித யுத்தத்துக்குத் தயாராகும்படி அமைச்சர் அறைகூவல் விடுத்துள்ளார். புனித யுத்தத்துக்குத் தயார்ப்படுத்த உலகளாவிய இஸ்லாமிய மதத் தலைவர்களின் மாநாடு ஒன்று பாக்தாத்தில் கூடப்படவுள்ளது. இம் மாநாட்டுக்கு ஈரானுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

**திரும்பப் பெறவும்**

ஈழநாதம் விளம்பரப்பகுதிகளில் பிரசுரிப்பதற்காக கொடுத்திருந்த புளொக்குகளை உரியவர்கள் விரைவில் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு நிர்வாகம் கேட்டுக்கொள்ளுகின்றது.

## அறிவித்தல்

### வடபிராந்திய போக்குவரத்துச்சபை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் சாரதி, காப்பாளர், தளமட்ட சகல நிரந்தர ஊழியர்களையும் இன்று ஜனவரி 2 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் தத்தமது சாலைகளில் கடமையாற்றும்படி வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் கேட்டுக்கொள்ளுகின்றார்.

அவ்வாறு தத்தமது சாலைகளில் கடமைத்


UNIVERSAL
FOR GOD AND COUNTRY

# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**புதிய வகுப்புகள் யாவும்**

தை 5 முதல்

(B/1796)

# A/L - 91, 92

புதிய பிரிவுகள் ஆரம்பம்
5-01-91 சனிக்கிழமை - பி.ப. 2. 30 மணி

**Physics** - திரு. வர்ணம்
**Chemistry** - திரு. தில்லை
**Botany** - திரு. நேசன்
**Zoology** - திரு. நாகநாதன்


# 2 ஆம் ஆண்டு நினைவுநாள்

| அன்னை மடியில் | | மண்ணின் அடியில் |
|---|---|---|
| 16 — 10 — 1958 |  | 23 — 12 — 1988 |

## தம்பையா இருகுலசிங்கம்

வீரனாய் வாழ்ந்து வரலாறு படைக்க வந்தவன்
வீணர்கள் வலைதனில் விழுந்தனையோ?
அமைதிப் படையுடன் அண்டிய கும்பல்
அரசாளும் ஆசையினால் அந்நியர்
துணைகொண்டு உன் உயிர் குடித்தனரோ?

உன் பிரிவால் துயருறும்
அம்மா

(R/985)


# வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
## கல்வியாண்டு 1991 - 92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளான

- கலைமாணி B A.
- விஞ்ஞானமாணி B. Sc:
- வணிகமாணி B. Com.

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரக்கொத்தினையும், விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 19-01-1991
விரிவுரைகள்: 20-01-1991 இல் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B: 1793)

# தாவரவியல் - திரு. செல்வநேசன்

தை

# 5

முதல்

(B/1796)

## A/L - 91, 92

புதிய பிரிவுகள் ஆரம்பம்

5-01-91 சனிக்கிழமை - பி.ப. 2.30 மணி

**Physics** - திரு. வர்ணம்
**Chemistry** - திரு. திகிலை
**Botany** - திரு. நேசன்
**Zoology** - திரு. நாகநாதன்
**Pure** ] **Maths** திரு. நல்லையா
**Applied** ] - திரு. கிருஷ்ணா

New Master Institute

B. M. C. Lane, JAFFNA.

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்;

(B/1784)

## NEW BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### கலை, வர்த்தகம்

### A/L 90, 91, 92

- பொருளியல் — லோகசிங்கம் வரதராஜன்
- வர்த்தகம் — பிரபல விரிவுரையாளர்
- கணக்கியல் — யோகராஜா
- அளவையியல் — விக்கி
- தமிழ் — மீரா
- இந்துநாகரிகம் — கிருஷ்ணா

ஆரம்பம்: 06-01-1991

ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி

(B/1775)

## ஏவுகணையாக மாறவேண்டும்

(பாக்தாத்)

வளைகுடாவில் யுத்தம் தொடங்கும் பட்சத்தில் உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் அமெரிக்காவிற்கு எதிரான ஒரு ஏவுகணையாக மாறவேண்டும் என்று ஈராக் சமயத்துறை அமைச்சர் பாக்தாதில் அறிவித்துள்ளார்.

இதேவேளை போரில் அமெரிக்கா ஈராக்கிலுள்ள இஸ்லாமிய சமய நிலையங்களைத் தான் முதலில் தாக்கத் திட்டமிட்டிருப்பதாகவும், அதைத் தடுக்க ஒரு புனித யுத்தத்துக்குத் தயாராகும்படி அமைச்சர் அறைகூவல் விடுத்துள்ளார். புனித யுத்தத்துக்குத் தயார்ப்படுத்த உலக ளாவிய இஸ்லாமிய மதத் தலைவர்களின் மாநாடு ஒன்று பாக்தாத்தில் கூட்டப்பட வுள்ளது. இந்த நாட்டுக்கு ஈரானுக்கு அழைப்பு விடுக்கப் படவில்லை.

### திரும்பப் பெறவும்

ஈழநாதம் விளம்பரப்பகுதிகளில் பிரசுரிப்பதற்காக கொடுத்திருந்த புளொக்குகளை உரியவர்கள் விரைவில் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு நிர்வாகம் கேட்டுக்கொள்ளுகின்றது.

## அறிவித்தல்

### வடபிராந்திய போக்குவரத்துச்சபை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் சாரதி, காப்பாளர், தளமட்ட சகல நிரந்தர ஊழியர்களையும் இன்று ஜனவரி 2 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் தத்தமது சாலைகளில் கடமையாற்றும் படி வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் கேட்டுக்கொள்ளுகின்றார்.

அவ்வாறு தத்தமது சாலைகளில் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறியவர்கள் தமது சொந்த விடுமுறைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

— பொதுமுகாமையாளர்

வடபிராந்திய
போக்குவரத்துச்சபை,
தோண்டமானாறு.
02-01-1991

(B - 1803)

## தசாக அழைப்பு

அன்புடையீர்!

கடந்தசெவ்வாய்க்கிழமை(25-12-90) சிவபதம் அடைந்த

**கதிரவேற்குருக்கள் சுப்புலட்சுமி அம்மா அவர்களின்**

அந்தியக்கிரியைகள்

2-1-91 (புதன்கிழமை) 11 மணிக்கு தசாகம்
3-1-91 (வியாழன்) ஏகோதிஷ்டம்(மாசியம்)
4-1-91 (வெள்ளி) சபிண்டிகரணம்
5-1-91 (சனி) கிருகயக்ஞம்

ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளதால் இதில் தாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

மாதகல் கிழக்கு,
மாதகல்.

இப்படிக்கு
கதிரவேற்குருக்கள்,
குடும்பத்தினர்.

(B-1798)

## கல்வியாண்டு 1991 - 92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளான

- கலைமாணி B A
- விஞ்ஞானமாணி B. Sc:
- வணிகமாணி B. Com.

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும், விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 19-01-1991
விரிவுரைகள்: 20-01-1991 இல் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B: 1793)

## தாவரவியல் - திரு. செல்வநேசன்

★ (மீட்டிரிவான, விளக்கமான சுறிப்புகளுக்கு)

**A/L - 92** ★ விலங்கியல் ★ உருவவியல்
**A/L - 91** ★ தாவர இராட்சிய பிரிவு ★ உயிர்த்தொழிலியல்
**A/L - 90** ★ சூழலியல் ★ இழையவியல் விளைவிடை

விபரங்களுக்கு:

New Master Institute

B. M. C. Lane, JAFFNA

(B. 1782)

## கணிதப் பிரிவு மாணவர்களுக்கு

### A/L 90, 91, 92.

- திரு. நல்லையா
- திரு. கிருஷ்ணா

ஆகிய தரமான ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

(ஒவ்வொரு பிரிவிற்கும் மாதத்திற்கு 35 மணித்தியாலத்திற்குக் குறையாத வகுப்புக்கள்)

மேலதிக விபரங்களுக்கு:

New Master Institute

B. M. C. Lane, JAFFNA.

(B/ 1783)

இதனால் விடுதலைப் புலிகளின் இந்தப் போர் நிறுத்த அறிவிப்பானது சிறிலங்கா அரசாங்கத்தை ஒரு அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இதனை போர் நிறுத்தத்தை ஆரம்ப மூன்று நாள் கால அவகாசம் கோரியதில் இருந்தே தெரிந்து கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளின் இந்த யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்றுக்கொள்வதானால், தமிழ்ப் பகுதிகளில் இராணுவ ரீதியில் புலிகளின் மேலாண்மையை ஏற்றுக்கொள்வதாக முடியும். இது இராணுவ வட்டாரங்களிலும், அரசியல்கட்சிகளின் மத்திலும் பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகி ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் எதிர்காலத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கக் கூடியதாக அமையலாம். இந்த ஆறு மாத காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறை வெளியுலகிற்குத் தெரிய வருவதோடு, உலக நாடுகளில் இருந்து குறிப்பிடக்கூடிய அழுத்தங்களும் ஏற்படலாம்.

அதேவேளை போர் நிறுத்தத்தை நிராகரிப்பதானால் இதுவரை சிறிலங்கா அரசாங்கம் கூறி வந்தது போன்று பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறுவதை தாமே மறுப்பதாகின்றது. இதுவும் சிறிலங்காவிற்கு நெருக்கடிகளைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் உள்ளது. அதேவேளை பேச்சுவார்த்தையையோ, யுத்த நிறுத்தத்தையோ அரசாங்கம் நிராகரிப்பதை இராணுவ தரப்பினில் ஒரு பகுதியினர் எதிர்க்கவும் கூடும் என்ற நிலையும் உள்ளது.

அத்தோடு கொழும்பில் வெளிவரும் தி ஐலண்ட் போன்ற பத்திரிகைகள் யுத்த நிறுத்தத்தை எதிர்த்துச் செய்திகளும், கட்டுரைகளும் வெளியிட்டு வருகின்றன. இவை அரசிற்கெதிரான ஒரு பலமான எதிர்ப்பைத் திரட்டவல்லனவாகவுள்ளன.

இந்த நிலையில் தான் விடுதலைப்புலிகளால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. ஏற்கவும் முடியாமல், நிராகரிக்கவும் முடியாமல் அரசாங்கம் நிலை தடுமாறுகின்றது.

இதேவேளை தமிழர் தரப்பில் இந்த யுத்தநிறுத்த அறிவிப்பானது மிகவும் பலமானதாகும். இதுவரை காலமும் தமிழர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளும் யுத்த நிறுத்தங்களும் ஒரு பலவீனமான நிலையிலேயே மேற்கொள்ளப்பட்டன. தமிழர் தரப்பில் இருந்த பல குழுக்களும், கட்சிகளும் இதற்கு வாய்ப்பாக இருந்தன. தமிழரின் உரிமைகளுக்குப் பதில் தமது பங்கிற்காகவே அவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தினர் இதனை சிறிலங்கா அரசாங்கங்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. இதனால் தமிழர் உரிமைகளை தட்டிக் கழிப்பதில் வெற்றியும் கண்டன.

ஆனால். இன்று இந்த நிலை இல்லை: தமிழர் தரப்புப் பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகள் மட்டுமே உள்ளனர் தமிழர்களின் தொடர்பான பிரச்சினைகள் அவர்களுடனேயே பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலையுள்ளது இதற்கு மக்கள் மத்தியில் அவர்கள் பெற்றுள்ள செல்வாக்கும், தமிழர் பிரதேசத்தை அவர்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதும் காரணமாகின்றது. ஏனைய குழுக்கள் தமிழர் பிரதிநிதிகள் அல்ல என்பதை அரசாங்கம் ஒத்துக்கொண்டே ஆகவேண்டிய ஒரு நிலை,

இந்தநிலையில், விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பானது தந்திரோபாயரீதியானதும், இராஜதந்திர ரீதியானதுமாகும் ஆனாலும் யுத்தநிறுத்தத்தை ஏற்று பேச்சுவார்த்தைக்கு வருவதற்கும், தமிழர்களுக்கு அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்குவதற்கும் அரசியலில் துணிவான நடவடிக்கைகள் தேவை, இதனை இன்றைய அரசாங்கம் மேற்கொள்ளுமா? அல்லது இராணுவத் தீர்வுதான் தமிழர் தேசிய பிரச்சினைக்கு வழி என்ற முடிவில் யுத்தத்தை தொடர்ந்து சிறிலங்காவை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லுமா? இதை தீர்மானிக்கும் பொறுப்பு இன்று சிறிலங்கா அரசாங்கத்திடமே உள்ளது,

...சிங்களவர்களா லும் நிரப்பப்பட்டு வருகின்றது. மீன்பிடி நிலையங்களும் இவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

எனவே நாம் காலத்திற்கு ஏற்றதும் இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறும் தாக்குதல் திட்டங்களை வகுக்கின்றோம். உதாரணமாக கடந்த 13. 6. 1990 கறுப்பு உப்புவெளி 3ஆம் கட்டையில் சிறிலங்காப் படைகளுடன் 10நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற யுத்தமும், கடற்படை பரிசோதனை சிறிலங்க விமானப் படையினர் மீதான நாம் தொடுத்த தாக்குதலும் நிலைமைக்கு ஏற்றவாறு பொருத்தமான போர் முறையைத் தெரிவு செய்கின்றோம் என்பதற்கு உதாரணங்களாகும்.

2. கேள்வி: 18 12 1990 அன்று பன்மதவாச்சியில் நீங்கள் நடாத்திய தாக்குதலில் திருமலை மாவட்ட இராணுவ தளபதியும் இந்த மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரும் வேறு ஆறு பேருமாக எல்லாமாக 8 பேர் அகால மரணத்தைத்தழுவிக் கொண்டனர். இத் தாக்குதலைப் பற்றி எமக்கு விளக்கமுடியுமா?

பதில்: நான் ஏற்கனவே கூறியதுபோல சிவில் நிர்வாகம் என்ற பெயரில் திருக்கோணமலை மாவட்டம் சிங்கள மயப்படுத்தப்படுகின்றது இதன் ஓர் அங்கமாக பன்குளம் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றி பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது. இவற்றைப் பார்வையிடவும் இராணுவத்தினருக்கு உற்சாகமூட்டவுமே மாவட்ட இராணுவ தளபதியும், பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகரும் 18-12-90 அன்று சென்றனர். இவர்கள் மீதான தாக்குதல் திருக்கோணமலை யாழ்ப்பாண வீதியில் வேப்பங்குளத்திற்கும் முதலிக்குளத்திற்கும் இடையில் உள்ள பன்மதவாச்சியில் வைத்து மேற்கொள்ளப்பட்டது.

வேப்பங்குளத்துக்கும் முதலிகுளத்துக்கும் இடைத்தூரமாக 3 மைல் இடைத்தூரமே. இவ்விரு இடங்களிலும் இராணுவ முகாம்கள் அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட இராணுவ தளபதியும் பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகரும் பயணம் செய்தபோது இவ்விரு முகாம்களிலும் இருந்து 500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் 3 மைல் தூரத்தையும் ஆக்கிரமித்து நின்றிருந்தனர்.

அவ்வேளையில் தான் இராணுவ தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டோம். அநேகமாக உயர் அதிகாரிகள் பயணம் செய்யும் வசதியான வாகனமும் தொடரில் வந்ததால் ஆட்கள் தொகை கூடுதலாக வந்த ட்ரக் வண்டிகளை விட்டு விட்டு "லான்



...ர் குறிப்பிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

(4). கேள்வி:- அநுராதபுர மாவட்டத்தின் மேற்குப் பகுதியான மாமடுவில் 21-12-90 வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 6 சிப்பாய்கள் இறந்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பிற்கு சில நாள் முன்னர் திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ரூபன் அவர்கள் ஈழநாதத்திற்கு வழங்கிய விசேஷ பேட்டி.

அத்துடன் எமது மண்ணையும், எமது மக்களையும் பாதுகாக்க எவ்விதமான ஆபத்தின் மத்தியிலும் உறுதியாக போராடுவோம் என்பதை சிறிலங்கா அரசுக்கும், உலகத்திற்கும் உணர்த்தியிருக்கின்றோம்.

3. கேள்வி: திருக்கோணமலை மாவட்டத்தில அபிவிருத்தி என்ற பெயரில் மீன்பிடித்துறை விஸ்தரிப்புக்காக சில பகுதிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். இது தொடர்பாக எமக்கு விளக்கமாகக் கூற முடியுமா?

பதில்:- இன்றைய நிலையில் சிறிலங்கா அரசு வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களை புவியியல் ரீதியாக பிரிக்க பல வேலைத் திட்டங்களை திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது.

இதற்கு உதாரணமாக சேருவில என்ற தனித் தொகுதி உருவாக்கியதையும், கொக்கிளாய், புல்மோட்டை, கல்லாறு, புடைவைக்கட்டு, சலப்பையாறு, இறுமாபுரம் ஆகிய மீன்பிடி கிராமங்களை உருவாக்கியுள்ளது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

சேருவிலையானது திருக்கோணமலையையும், மட்டக்களப்பையும் புவியியல் ரீதியாக பிரிப்பதைப் போன்று கொக்கிளாய் ஆனது திருக்கோணமலையையும் யாழ்ப்பாணத்தையும் பிரிக்கின்றது.

தமிழ் மக்களை மேலும் சிறுபான்மையாக்கி தொடர்பு நிலையை அறுப்பதற்காக மேலும் சிங்களவர்களை திருக்கோணமலை மாவட்டத்தில் குடியேற்றுவதற்காகவே அபிவிருத்தி என்ற பெயரில் மீன்பிடித்துறை அமைச்சுக்காக இங்கு சில பகுதிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா அரசின் இந்த நடவடிக்கையானது திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்கள மீனவர்களை பெருமளவில் குடியேற்றவும் இந்த அமைப்பில் பணியாற்றும் சிங்கள அரச ஊழியர்களுக்கு இருப்பிட வசதி என்ற போர்வையில் இன்னும் பல சிங்களவர்களையும் கொண்டு வருவதற்கே ஆகும்.

துள்ளது. அதேவேளை அநுராதபுர மாவட்டத்தில் நீங்கள் நடத்திய தாக்குதலில் 19 சிப்பாய்கள் மாண்டு போனதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது நீங்கள் போராட்டமையத்தை அநுராதபுர மாவட்டத்தின் இருபகுதிகளுக்கூடாக நடாத்திய தன் காரணம் என்ன?

பதில்:- திருக்கோணமலை மாவட்டத்தின் எல்லையோரங்களில சிங்களவர்களைக் குடியேற்றுவதன் மூலம திருக்கோணமலை மாவட்டத்தின் பரப்பளவை அதாவது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தின் பரப்பளவை குறைத்து வருகின்றது.

ஏனெனில் திருக்கோணமலை மாவட்டத்தின் எல்லையாக திருக்கோணமலை கொழும்பு வீதியில் அனுராதபுரமும், திருக்கோணமலை யாழ்ப்பாண வீதியில் ஹொரவபொத்தானவும் விளங்குகிறது.

கந்தளாயையும் ஹொரவபொத்தானையையும் இணைக்கும் பாதையிலேயே 24.12 90 அன்று தாக்குதல் மேற்கொண்ட பண்டாரகம என்ற இடம் இருக்கிறது இப்பகுதி எமது மாவட்டத்துக்கே சொந்தமானது.

சிறிலங்காஅரசு நாம்வடக்கு கிழக்குக்கு அப்பால்போராட்டத்தை விஸ்தரிக்கிறோம் என்பதைஉலகிற்குகாண்பித்து சர்வதேச அரங்கில் அனுதாபத்தைப் பெறவே எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அனுராதபுர மாவட்டத்தில் இடம் பெற்றதாக பிரசாரம் செய்கிறது.

எமது மண்ணை மீட்டு எடுக்கவே நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் அதே வேளை சிறிலங்கா அரசு எமது மண்ணை அபகரித்து தமிழ் மக்களை அடிமைப்படுத்தவுமே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போராடி வருகிறது. எமது மாவட்டத்தின் எல்லைகளில் சிங்களவர்களை குடியேற்றி விட்டு அக்கிராமங்களுக்கு சிங்களப் பெயர்களை வைத்து விட்டு அப்பகுதிகளில் எம்மால் சிங்களப் படையினர்மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் போது

(4ஆம் பக்கம் பார்க்க)

…சென்று, அங்கு பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, இத்தாலி மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லவிருக்கிறார்

ஐரோப்பிய சமூக நாடுகள்
ஐரோப்பிய சமூக நாடுகள்

## பாக். தளபதி சீனா விஜயம்

(பீகிங்)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இராணுவத் தளபாடங்களை பீகிங்கிடமிருந்து பெறுவதை நோக்கமாகக் கொண்டே பாகிஸ்தான் இராணுவத் தளபதி பீகிங் சென்றுள்ளார். இவர் அங்கு நடத்திய பேச்சுவார்த்தைகள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா பாகிஸ்தானுக்கான இராணுவ உதவியை நிறுத்தியுள்ளமை தெரிந்ததே.

### மணணை

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

…யலில் உள்ள சிங்கள மாவட்டத்தினுள் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகப் பிரசாரம் செய்கிறது.

நாம் திருகோணமலை மாவட்டத்தின் எல்லைகளிலேயே தாக்குதல்களை மேற்கொள்கிறோம். அனுராதபுர மாவட்டத்தில் எம்மால் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை. எமது பிரதேசம் மீட்டு எடுக்கும் வரையில எல்லை ஓரத் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

…தாவரத்தின் இனப்பெருக்க வீதத்துடன் யாழ். மாநகர சபை ஊழியர்கள் கடந்த இரண்டு வார காலமாக கடுமையாக போராடி வருகின்றனர்.

ஆரியகுளத்தில் படர்ந்திருக்கும் சல்பீனியாத் தாவரத்தை அழிப்பதற்காக இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் இது வரை பூர்த்திபெறவில்லை. இதுபற்றி இவ்வேலைகளுக்கு பொறுப்பாக இருக்கும் அதி… இக்காரியத்தின் இனப்பெருக்கம் வேகம் கூடியதாக உள்ளதாகவும் படகுகளைச் சி… இத்தாவரம் இலகுவில் … செய்வதினால் இதை அழிப்பதற்கு மாற்று வழிவகை பற்றி ஆராய வேண்டி உள்ளதாகவும் தெரிவித்தனர்

இதேவேளை சல்பீனியாவுடன் போராட்டம் நடத்தும் மாநகர சபையினருக்கு ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் சங்கத்தினரும் கைகொடுத்து உதவி வருவதாகத் தெரிகிறது. (க)

### மகாநாயக்கர்களின்

பெரும்பான்மையினதும் அபிப்பிராயங்களை அரசு அறிந்து கொள்ளும் இத் தொடர்பாக மகாநாயக்கர்களின் கருத்துக்களை தாம் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குப் பகுதியில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை நிலைநாட்ட புலிகளும் அரசாங்கமும் சுமார் பதினான்கு மாதங்கள் பேச்சுவார்த்தை நடாத்திய சமாதான வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண புலிகள் விரும்பியதால் அரசாங்கம் அப்போது பேச்சுவார்த்தைக்கு இணங்கியிருந்தது எனவும் தெரிவித்தார்.

### வடக்கில்

இவ்வாறான உபகரணங்களைக் கொண்டு சிகிச்சைகளை மேற்கொள்வது சிரமமாக இருப்பதாகவும் போக்குவரத்து வசதி, தொடர்ச்சியான மின்சாரம் போன்றவை இல்லாத நிலையில் இச்சிகிச்சைப் பிரிவு தற்போது முற்றாக ஸ்தம்பித்துள்ளது. (உ)

### செயலக

பெற்ற அதிகாரிகளுக்கும் செயலக ஊழியர்களுக்கும் இடையிலான கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக அரசாங்க அதிபர் எஸ் சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்திற்கு யாழ் செயலகத்தில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் சமுகம் தந்திருந்தனர். இந்தக் கூட்டம் முடிவடைந்ததன் பின்பு மேலதிக அரசாங்க அதிபர் ஈழநாதத்திற்கு தெரிவிக்கையில் செயலகத்தில் கடமையாற்றுவோர் தூர இடத்திலிருந்து வருபவராக இருந்தால் இவர்களுக்கான போக்குவரத்து வசதியை செய்து கொடுப்பதற்கும் தாம் இந்தக் கூட்டத்தில் ஆலோசித்ததாக கூறினார். மேலும் இந்த போக்குவரத்து வசதிகளை செய்யும் பொருட்டு விரைவில் மினிபஸ் சங்கங்களுடன் தாம் தொடர்பு கொள்ள உள்ளதாகவும் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுபணிமனைகளில் பணிபுரியும் தூர இட உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமாக அவர் கூறும் போது இந்த உத்தியோகஸ்தர்களை அவர்கள் தங்கியிருக்கும் இடங்களிலே உள்ள பணிமனைகளுக்கு விரைவில் மாற்றப்பட உள்ளதாகவும் கூறினார். (லோ)

### யுத்தநிறுத்தம்

…டங்கவே தொடர்ச்சியாக கீரிமலை, தச்சன்காடு, மாவிட்டபுரம், சாந்தைச்சந்தி, கட்டுவன், வசாவிளான ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தொடர்ச்சியான பராவெளிச்சத்தில் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களையும் ஷெல் பிரயோகத்தையும் மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தை வரவேற்று மகிழ்ந்தனர்.

இராணுவத்தினரின் இந்த வானவேடிக்கை பலமைல் சுற்று வட்டாரங்களையும் அதிரவைத்தது. (ச)

(செ. த மை.)

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகம் மல்லாகம் 7 ஆம் கட்டை ஒழுங்கையிலுள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது.

தெல்லிப்பழையில் இயங்கி வந்த இந்த அலுவலகம், ஸ்ரீலங்கா அரசபடைகளின் தாக்குதல் நடவடிக்கைகளினால் சேதமடைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து அதாவது பாதுகாப்புக்கருதி இதுவரை 5 இடங்களில் இந்த அலுவலகம் இடமாறியிருந்தது குறிப்பிடத்தக்கது. உதவி அரசாங்க அதிபராக திரு நடராசா பதவியேற்றுள்ளார்.

### வீதி பேதம்

புதைவளையும், மீட்கப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது (நி)

### வவுனியா

…பற்றாக்குறை நிலவுவதால் மேற்படி உணவுப் பொருள்கள் புகையிரத நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படும் லொறிகளை இராணுவத்தினரால் வவுனியா ஜோசப் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் பல லொறிகள் வவுனியா இராணுவ முகாமினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந)

### இராணுவ

படை பௌத்த சங்கத்தாரிடமும் யுத்த நிறுத்தம் பற்றிய ஆலோசனைகளைக் கோரியுள்ளது.

மேலும் விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தின் பின்னர் தமிழீழ பிரதேசங்கள் எங்கும் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெறவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை யுத்தநிறுத்தம் பற்றி தகவல் வெளியிட்ட இராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தேடி அழித்தல் உட்பட சகல இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படும் என்றும் ரோந்துக் காவற் கடமைகளில் இராணுவத்தினர் ஈடுபடுவர் என்றும் அப்பொழுது ஆயுதபாணிகளான விடுதலைப் புலிகள் தென்பட்டால் இராணுவத்தினர் நடவடிக்கை எடுப்பர் என்றும் தெரிவித்தார்.

### சிறிலங்கா

அ…ற்றைச் சவாத்தித்து கொண்டு பரிசீலனை செய்யும் என்று இந்தியப் பிரதமர் சந்திரசேகர் கூறியதைத் தொடர்ந்து தாம் சில தகவல்களை வழங்கியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்

…ரு யிறந்து கலந்துரையாடப்பட்டது.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் இராசசுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலுக்கு கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் பங்குபற்றினர். (லோ)

## படகுப் போக்குவரத்து ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மண்டூர் - குருமண்வெளி, குருக்கள்மடம், அம்பிலந்துறை … படகுப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பித்துள்ளது.

அப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் வெளியேறிச் சென்றுவிட்டதைத் தொடர்ந்து படுவான்கரைப் பகுதியில் உள்ள தமது உறவினர்களின் நிலைமைகளை அறிந்துகொள்வதற்காக பெருந்திரளான மக்கள் வாவிக் கரையில் படகுகள் மூலம் படுவான் கரையை நோக்கி விரைகின்றனர்.

## கதிர்காமத்தில் பக்தர்களைத் தாக்கிய படையினர்!

(கொழும்பு)

கதிர்காமத்தில் பக்தர்கள் மூவரை கோஷ்டி ஒன்று தாக்கியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் காங்கேசன்துறை இராணுவ முகாமிலிருந்து லீவில் சென்ற இராணுவ வீரர் ஒருவரும், கட்டுநாயக்கா விமானப் படை வீரர் ஒருவரும் அடங்குவர்.

## கொக்குவிலில் உடைகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முகாம்களிலுள்ள வெளிமாவட்டங்களைச்சேர்ந்த அனைவருக்கும் உடைகள் வழங்கப்பட்டுள்ளன. கொக்குவிலில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின மண்டபத்தில் இது இடம்பெற்றது. ஜெர்மனியிலுள்ள தயாசொன்சென் போர்க் தாபனத்தின் உதவியினால் மல்லாகம கிராம அபிவிருத்திச் சபை இந்த உடைகளை வழங்கியுள்ளது. இவ்வாறு மல்லாகம் கிராம அபிவிருத்திச்சபை விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### செல்லையா அக்னெஸ்

செல்லையா அக்னெஸ் காலமாகிவிட்டார். இவர் ஆறுமுகம் அருளப்பு செல்லையாவின் அன்பு மனைவியும், A K அருளானந்தம் (அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரர்) அமலதாஸ், அன்ரன் (இந்தியா) காலம்சென்ற நவம், சாள்ஸ் (அமெரிக்கா), பவா (அமெரிக்கா), ராஜேஸ்வரி (பிரான்ஸ்), சேவியர், பரமேஸ்வரி (பிரான்ஸ்), குலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பம், லீலா, மேபிள், ஸ்ரெப்னி (கொழும்பு), சின்னு இந்தியா), அனுஷியா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், தம்பித்துரையின் சகோதரியும், ஞானம்மா, நாகம்மா ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இன்று புதன்கிழமை மாலை 3 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

ஆரோக்கியநாதர் கோவிலடி,
107/3 கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

(R/995

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மின் நிலைய வீதி, 31ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.